மாண்புமிகு நீதிபதி அவர்கள், தங்களையும், நான் சொன்ன கருத்தையும் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன கருத்தையும் விமர்சித்து இது நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். இதில் சுப்பராயன் கூறும்போது நான் பெருந்தன்மையாக நடந்து கொள்வேன் என்று சொல்லி, அது கோழைத்தனம் என்பதைப்போல சொல்லாமல் சொன்னார்கள். பெருந்தன்மை சில நேரங்களில் கோழைத்தனமாகக் கருதப்படும். ஆனால், கோழைத்தனம் என்று கருதப்பட்டாலும் பெருந்தன்மை என்றைக்கும் நிலைக்கக்கூடியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மீண்டும் மீண்டும் தொடர்ந்து இரண்டு இறையாண்மைமிக்க மன்றங்களுக்கிடையே தகராறுகள் வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நமக்குக் காரியம் முக்கியம். காரியம் என்றால், இந்த ஆட்சிப் பொறுப்பிலே ஏதோ இருக்க வேண்டும என்ற அந்தக் காரியமல்ல. தமிழகத்திலேயுள்ள இளைஞர்கள், ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் பேரை கணினி பயிற்சி பெற்றவர்களாக சாஃப்ட் வேர் கற்றவர்களாக வேலைவாய்ப்புப் பெற தகுதி பெற்றவர்களாக உருவாக்குகின்ற அந்தப் பொற்காலம் உருவாக வேண்டுமே என்பதான அந்தக் காரியம்தான் நமக்கு முக்கியம்.

பாரதத்திலே ஒரு நிகழ்ச்சி உண்டு, பேச்சு நீளமாகப் போனாலும் தயவுசெய்து மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். பாரதத்தில் அர்ச்சுனன் மீது ஒரேயொரு முறைதான் அம்பு எய்த வேண்டும் என்று அவனுடைய தாயார் கர்ணனிடத்திலே கேட்டு, கர்ணனும ஒத்துக்கொண்டு, ஒரேயொரு கணையைத்தான் விடுவேன், அதில் அர்ச்சுனன் நிச்சயமாக இறந்துவிடுவான் என்று சொல்லி அந்த அம்பை எய்தான். அந்த நேரம் பார்த்து சாரத்தியம் செய்து கொண்டிருந்த கிருஷ்ண பரமாத்மா தேர்க்காலை தன்னுடைய பெருவிரலால் அழுத்த, தேர் கீழே அமுங்கி விட்டது. எய்யப்பட்ட அந்த அம்பு அர்ச்சுனனுடைய கிரீடத்தை மாத்திரம் பறித்துக் கொண்டு போய்விட்டது. அந்த நேரத்திலே கிருஷ்ண பரமாத்மா அந்த தேர்க்காலை ஒரு அடி கீழே அழுத்தாமல் இருந்திருந்தால் அர்ச்சுனனுடைய தலையே போயிருக்கும். இப்போது தலைக்குப் பதிலாக தலைப்பாகைதான் போயிற்று. எனவே தலைப்பாகை போகின்ற அளவுக்குத்தான் நம்முடைய பெருந்தன்மை இருக்கும். அதற்காகத் தலையை இழந்துவிடக்கூடாது. எதிர்கால இளைஞர்களுக்கான காரியத்தை விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

முற்பகல் 10-50

நான் சொன்ன அந்தக் கருத்து, அன்றைக்குத் தெரிவித்த கருத்து நீதிமன்றத்திற்கு மனப் புண்ணை ஏற்படுத்தியிருக்குமானால் அதற்காக நான் வருந்தக்கூடச் செய்கிறேன். ஏனென்றால், ஒரு பொறுப்பிலே இருப்பவன், இரண்டு மன்றங்களுக்கிடையே நடைபெறுகின்ற போட்டாப்போட்டியை வளரவிடுவது சரியல்ல. அதற்கு நானே காரணமாக இருப்பது சரியல்ல. எனவே, இப்பிரச்சினையை தங்களுடைய விருப்பத்திற்கு விட்டுவிடுகின்றேன். தாங்கள் குறிப்பிட்ட பகுதியை அவைக்குறிப்பிலிருந்து எடுத்தால், நண்பர் சுப்பராயன் அவர்களின் ஒப்புதல் இதற்கு இல்லையென்றாலும்கூட— எனக்காக ஒப்புதல் . தருவார் என்று கருதி, இந்த விளக்கத்திற்குப் பிறகும் மறுக்க மாட்டார் என்ற எண்ணத்தோடு அன்றையதினம் நானும் அவரும் பேசிய பேச்சிலே ஏதாவது வேண்டத்தகாத செய்திகள் வார்த்தைகள் இருக்குமேயானால் அவற்றை அவைக்குறிப்பிலேயிருந்து எடுப்பதில் எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே இந்தப் பிரச்சினையில் பேசிய நேரத்தில், எந்த மாண்புமிகு உறுப்பினரும் பேரவைத் தலைவரைப் பற்றிக் கவலையே படவில்லை என்ற ஆதங்கம் எனக்கு இருக்கிறது. காரணம், மாண்புமிகு நீதிபதி அவர்கள் நேற்று உயர் நீதிமன்றத்திலே பேசிய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதைப் பேரவைத் தலைவர் அனுமதித்து இருக்கக்கூடாது என்று பேசியிருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே ஐம்பதாண்டுகள் சட்டமன்றததிலே இருந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற மரபுகளை மீறிப் பேசுகின்றார், நான் அதை அனுமதித்திருக்கக்கூடாது என்று நீதிபதி எந்த அர்த்தத்தில் சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரிந்தமட்டில் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த மரபையும் மீறவில்லை அவருடைய பேச்சிலே என்பது என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும ஒலி)

இப்படி சட்டமன்றம் செய்துகொண்டே போனால், நீதிமன்றத்திற்கு என்ன மரியாதை, நாங்கள் எப்படி நீதிமன்றத்தை நடத்தமுடியும் என்று அவர் கேட்டிருக்கின்றார். பதிலுக்கு நான் கேட்க முடியும். சட்டமன்ற வளாகத்திற்குள்ளே நடந்த ஒரு நிகழ்வு, அந்த நிகழ்வு